

கழக இளைஞரணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் அண்ணா அறிவாலயத்தில் கழக முன்னாள் அமைப்புச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் விருத்தாசலம் எம்.செல்வராஜின் தம்பி செல்வநாதன் விஜயலட்சுமி மகளும் கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் தங்கை சுமதி கார்த்திகேயன் மகள் கிருத்திகா அமெரிக்காவில் உள்ள குயின்சி மாகாணத்தில் "President Education Award Program Outstanding Excellent First Rank Golden Award பெற்றதையொட்டி வாழ்த்துப் பெற்றார். உடன் நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் உள்ளனர்.

## இன்று 6 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஆக. 30–

சென்னை வானிலை ஆய்வு மையம் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஈரோடு, நாமக்கல், சேலம், நீலகிரி, கோயம்புத்தூர், தேனி ஆகிய மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ள தாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, அடுத்த ஏழு தினங்களில் இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என தென் மண்டல வானிலை மையம் ஏற்கெனவே தெரிவித்திருந்தது. இதேபோன்று, வங்கக்கடலில் இன்று (ஆக. 30) மத்திய கிழக்கு மற்றும் அதை ஒட்டிய வடக்கு வங்கக் கடலில் புதிய குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் சேவைகளை சங்க உறுப்பினர்கள் –

# பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் "கூட்டுறவு" செயலி!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக. 29 -

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் சேவைகளை பொது மக்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் அறிந்து கொள்ளும் வகையில், "கூட்டுறவு (Kooturavu)" என்ற செயலியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நேற்று (27.08.2024) சென்னை, கீழ்ப்பாக்கம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில், கூட்டுறவுத்துறையின் அறிவிப்புகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், கூடுதல் பதிவாளர்கள், இணைப்பதிவாளர்கள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர்கள் ஆகியோர்களுடன் கலந்தாலோசித்து, கடந்த காலங்களில் அறிவிக்கப்பட்ட கூட்டுறவுத்துறை அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்து கேட்டறிந்தார்கள்.

பின்னர், அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசும்போது தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணங்களுக்கேற்ப கூட்டுறவுத் துறை சிறப்பான செயல்பாடுகளை செய்துவருகிறது. அரசின் திட்டங்கள், பொங்கல் பரிசு தொகுப்பு, நிவாரண தொகை வழங்குதல் போன்ற சிறப்பு அறிவிப்புகளை மக்களிடத்தில் கொண்டு செல்லும் பணியினையும் செவ்வனே செய்து வருகிறது பாராட்டுக்குரியது. இந்த ஆய்வுக்கூட்டம் மூலம் கடந்த காலங்களில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் 100 சதவீதம் செயல்படுத்தப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டமான மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்காக தமிழ் மகள் தொடர் வைப்புத்திட்டம் மூலம் 8,19,419 சேமிப்புக் கணக்குகள் துவக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க கூட்டுறவு அமைப்புகள் மூலம் 500 முதல்வர் மருந்தகங்களும் மற்றும் தொழில்முனைவோர் மூலம் 500 முதல்வர் மருந்தகங்களும் திறக்கப்படவுள்ளது. முதல்வர் மருந்தகங்களுக்கு அரசு மானியமாக ரூ.3 லட்சம் வரை வழங்குவது குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவு வங்கிகள் மூலம் நகை மதிப்பில் 75 சதவீதம் வரை கிராமுக்கு ரூ.5000 வரை நகைக்கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதற்கான வட்டிவிகிதம் 9 முதல் 10.50 சதவீதம் ஆகும். தனிநபர் ஒருவருக்கு ரூ.30 லட்சம் வரை நகைக்கடன் வழங்கப்படுகிறது. இதன் மூலம் விவசாயிகளுக்கு தொடர்ந்து நகைக்கடன் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இரு சக்கர வாகனங்களுக்கு ரூ.2 லட்சம் வரையிலும், நான்கு சக்கர வாகனங்களுக்கு ரூ.20 லட்சம் வரையிலும் 12 சதவீத வட்டி விகிதத்தில் வாகன கடன் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் கூட்டுறவுத்துறையின் மானியக்கோரிக்கையின் போது, "கூட்டுறவு அமைப்புகளில் அங்கத்தினர்களாக உள்ள விவசாய பெருங்குடி மக்கள் சிறு வியாபாரிகள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறு பான்மையினர் உறுப்பினர்கள் மற்றும் நகைக்கடன் பெறும் இணை உறுப்பினர்கள் விரைவாகவும், எளிதாகவும், கடன் பெற்றிட இணைய வழி கடன் வழங்கும் வசதி செயல்படுத்தப்படும். இதன் மூலம் இளைய தலைமுறையினர் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் காலவிரயமின்றி உடனடி வங்கிச் சேவை பெறுவது உறுதி செய்யப்படும்." என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி, கூட்டுறவுத் துறையில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில், பல்வேறு வகை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் சேவைகளை பொது மக்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் அறிந்து கொள்ளும் வகையில், கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்படும் சேவைகள் தொகுக்கப்பட்டு, கூட்டுறவு (Kooturavu) என்ற பெயரில் செயலி உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இச்செயலி மூலம் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் பல்வேறு வகைக்கடன் குறித்த தகவல்களை தெரிந்து கொள்ளவும், பொது மக்கள் தங்களது கடன் தேவைக்கேற்ப, கடன் விண்ணப்பத்தினை இணைய வழியே சமர்ப்பித்திடும் வகையில், இச்செயலியில் கடன் விண்ணப்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இச்செயலி மூலம் கடன் விண்ணப்பத்தில் உரிய விவரங்களை பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலம், கடன் விண்ணப்பங்கள் தொடர்புடைய கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வங்கிகளுக்கு இணையவழி சமர்ப்பிக்கப்பட்டு, கடன் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் கடன் தகவல்களை தெரிந்து கொள்ளவும், கடன் விண்ணப்பத்தினை இணைய வழியில் சமர்ப்பிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்செயலி மூலம், பயிர் கடன், மீன் வளர்ப்பு கடன், கால்நடை பராமரிப்புக் கடன் மற்றும் இதர வகைக் கடன்களை கடன் விண்ணப்பம் என்ற பகுதியில் சமர்ப்பிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இச்செயலியின் தொகுப்பில் உங்கள் சங்கம் என்ற பகுதியில், பொது மக்கள் தங்களது பகுதியில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கிகள் அமைந்துள்ள விவரங்களை தெரிந்து கொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இவாடகை என்ற பகுதியில், ஒரு உறுப்பினர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்படும் வேளாண் சேவை மையங்கள் குறித்த விவரங்களையும், வேளாண் பொறியியல் இயந்திரங்களை வாடகைக்கு எடுத்து பயன்படுத்துவதற்கு ஏற்ப, வேளாண் பொறியியல் இயந்திரங்களின் இருப்பு நிலையினை அறிந்து, தேவையான வேளாண் உபகரணங்களை குறைந்த வாடகைக்கு எடுத்து பயன்படுத்திட ஏதுவாக இ வாடகை பகுதியில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வங்கி சேவை பகுதியில், பொதுமக்கள் தங்களது பகுதியில் உள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் முகவரியினை தெரிந்து கொண்டு வங்கியினை தொடர்பு கொள்ள வங்கியின் முகவரி மற்றும் தொலைப்பேசி எண் மற்றும் மின் அஞ்சல் விவரங்கள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வங்கி சேவைப் பகுதியில், கூட்டுறவு வங்கியின் மூலம் வழங்கப்படும் அனைத்து வகைக் கடன்கள் குறித்த விவரங்கள், வழங்கப்படும் கடன் உச்ச அளவு, திருப்பிச் செலுத்தும் அதிகபட்ச கால அளவு, வட்டி விகிதம், கடன் வழங்கும் காரியம் போன்ற விவரங்கள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

பணியாளர் நாள் என்ற பகுதியில், கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தினை தெரிந்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இசேவை என்ற பகுதியில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப்படும் பொது சேவை மையங்களின் முகவரி, அலைப்பேசி எண் விவரங்கள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது. பொது மக்கள் அவர்களது மாவட்டம், தாலுக்கா மற்றும் கிராம விவரங்களை தெரிவு செய்வதன் மூலம் அவர்களது பகுதியில் உள்ள பொது சேவை மையங்களின் இருப்பிட விவரத்தினை தெரிந்துகொண்டு பயன் பெறலாம்.

செயலியில், மருந்தகம் என்ற பகுதியில், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப்படும் மருந்தகங்களின் விவரங்களை, அவர்களது மாவட்டம் மற்றும் நிறுவனத்தின் பெயர்களை தெரிவு செய்வதன் மூலம் பொது மக்கள் அவர்களது பகுதியில் உள்ள கூட்டுறவு மருந்தகங்களை தெரிந்து கொண்டு, 20% தள்ளுபடி விலையில் மருந்துகளை பெற்று பயன் பெறலாம்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் 100 மெ.டன், 500 மெ.டன், 1000 மெ.டன் மற்றும் 2000 மெ.டன் அளவுகளில் கிடங்குகள் கட்டப்பட்டு, கிடங்கு மேம்பாட்டு ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டு, பொதுமக்கள் மற்றும் விவசாய உறுப்பினர்களுக்கு அவர்களது விலை பொருட்களை பாதுகாப்பாக வைத்திடவும், விலைப்பொருட்கள் மீது தானிய ஈட்டுக் கடன் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்செயலியில் கிடங்கு என்ற பகுதியில், தமிழகத்தில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படும் கிடங்குகளின் முகவரி மற்றும் அலைப்பேசி எண் விவரங்கள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாய உறுப்பினர்கள் கிடங்கு வசதியினை குறைந்த வாடகையில் பெற்று பயன் பெறலாம்.

கூட்டுறவுச் செயலியில், நியாயவிலைக் கடை என்ற பகுதியில், தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகள் விவரங்கள் அனைத்தும் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது. பொது மக்கள் அவர்களது மாவட்டம், தாலுக்கா மற்றும் கிராம விவரங்களை தெரிவு செய்வதன் மூலம் அவர்களது பகுதிக்குட்பட்ட நியாயவிலைக் கடை முகவரி, தொலைப்பேசி எண் விவரங்களை இச்செயலி மூலம் தெரிந்து கொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச்செயலாளர் டாக்டர்.ஜே.ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர்.ந.சுப்பையன், கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி. ப.காயத்ரி கிருஷ்ணன், ஆகியோர் உட்பட அனைத்து கூடுதல் பதிவாளர்கள், இணைப்பதிவாளர்கள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதி, விராலிமலை கிழக்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர் மு. பி.ம.சத்தியசீலன் வரவேற்பில், ஒன்றிய அவைத்தலைவர் ஏ.நேரு தலைமையில், மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் சிறப்புரையில் களமாவூர் அழகு நாச்சியம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி, மாவட்ட துணைச் செயலாளர் எஸ். எஸ்.கருப்பையா, மாவட்ட பொருளாளரும், புதுக்கோட்டை துணை மேயருமான எம்.லியாகத் அலி, பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மு.பி. மணி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் முனைவர் டாக்டர் சி.குறிஞ்சிவாணன், விராலிமலை மத்திய ஒன்றிய செயலாளர் கே.பி.அய்யப்பன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் விளாப்பட்டி சிவா, ஒன்றிய கழக நிர்வாகிகள் எம்.பாண்டியன், கலைவாணன், பரமேஸ்வரி காமராஜ், முத்துச்சாமி, பூபதி, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் , செல்லதுரை, எஸ்.டி.கண்ணன், ஆதனப்பட்டி நாகராஜ், மாத்தூர் பாலமுருகன், தமிழினியன் ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் மண்டையூர் மகேந்திரன், தேவராஜ், ராஜா ஸ்டாலின் உள்ளிட்ட ஊராட்சி மன்ற தலைவர்கள், கிளை கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## தண்டையார்பேட்டை மண்டலம் –

# பணிமனை அலுவலகம் 38 - இடமாற்றம்!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, ஆக. 30 –

சென்னை குடிநீர் வாரியம் வெளியிட்டுள்ள செய்தி வெளியீடு வருமாறு :–

தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட பணிமனை அலுவலகம் 38 இன்று ( 30.08.2024 – வெள்ளிக்கிழமை) முதல் கீழ்க்கண்ட புதிய முகவரியில் செயல்படும்.

பணிமனை அலுவலகம் 38, எண்.153ஏ, சுந்தரம் பிள்ளை நகர், 4வது பிரதான சாலை, தண்டையார் பேட்டை, சென்னை 600 081 எனும் முகவரியில் இருந்து பட்டேல் நகர் நீர் பகிர்மான நிலையம், எண்ணூர் நெடுஞ்சாலை, தண்டையார் பேட்டை, சென்னை 600 081 எனும் புதிய முகவரிக்கு மாற்றம் செய்யப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் சம்பந்தப்பட்ட புகார்கள் மற்றும் குடிநீர் வரி / கட்டணம் செலுத்தவும் மேற்கண்ட புதிய முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி எண்கள்

உதவிப் பொறியாளர் – 81449 30038

துணை பகுதிப் பொறியாளர் – 81449 30210

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "கலைஞர் 100 பள்ளிப்படை நாணயம்"



பள்ளிப்படை என்கிற சொற்றொடர் ஈராயிரம் ஆண்டுகளாக நம்மோடு தொடர்ந்து பயணிக்கிறது.

போர்க்களத்தில் வீரத்துடன் போர் புரிந்து இறக்கும் மன்னர்களுக்கு அமைக்கப்படுவதே பள்ளிப்படை என்றும்;

நாட்டின் தலைவனான மன்னன் மட்டுமின்றி அவனது ஆட்சிக்கு உறுதுணையாக இருக்கும் உறவுகளுக்கும் உருவாக்கப்படும் நினைவிடங் களை பள்ளிப்படையாக உருவாக்கி கோயிலாக பரிணாமம் பெற்று. தலைவன் நினைவாக வெளியிடப்படும் நாணயங்களை பள்ளிப்படை நாணயம் என்று ஆவணப்படுத்துகிறது வரலாறு.

கற்காலம்,புதிய கற்காலம் தொடங்கி தற்காலம் வரை நினைவிடங்கள் அமைத்து முன்னோர் வழிபாட்டை தொன்று தொட்டு செய்து வரும் பண்பாட்டு நாகரிக வளர்ச்சியைக் கண்டவர்கள் தமிழர்கள் என்பதும். இறந்தவர்களுக்கு நினைவுச்சின்னங்கள் எடுக்கிற வழக்கம் குறித்து சங்க இலக்கியங்களும் ஆவணப்படுத்துகின்றன. இவற்றின் தொடர்ச்சி பெற்ற நிலையே தனிக்கோவில்களாக உருவாக்கப்பட்டு பள்ளிப்படைக் கோவில்களாக பரிணாமம் பெற்றன. தமிழ்நாட்டில் சோழர் பாண்டியர் பல்லவர் என நூற்றுக்கணக்கான மன்னர்களின் சமாதிகள் சாமி உருவகமாக மாற்றம் பெற்று இன்று வரை சைவ - வைணவ சமய வழிபாட்டில் உள்ளது.

முதலாம் ஆதித்தனின் நினைவாக எழுப்பப்பட்ட பள்ளிப்படைக் கோயில் 'ஆதித்தேசுவரம்' என்றும், அரிஞ்சய சோழனின் பள்ளிப்படைக் கோயில் 'அரிஞ்சிகை ஈசுவரம்' என்றும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் திருவிடைமருதூருக்கு அருகில் ராஜராஜ சோழனின் துணைவியர்களில் ஒருவரான பஞ்சவன் மாதேவிக்கு. தன் சிற்றன்னை நினைவாகப் பேரரசன் ராஜேந்திர சோழன் கட்டிய பள்ளிப்படை ஆலயம் என்றழைக்கப்படும் சமாதிமேல் எழுப்பப்பட்ட கோயிலின் கருவறைக்குள் சிவலிங்கம் அமைக்கப்பட்டு சோழ நாட்டின் வரலாற்றை இன்னமும் தன்னுள்ளே பதிந்து காட்சி கொடுக்கிறது.

அடுத்ததாக மன்னர்களின் நினைவாக வெளியிடப்படும் நாணயங்களை பள்ளிப்படை நாணயம் எனவும். பள்ளிப்படை நாணயத்தில் மாமன்னரின் சாதனைகளை விளக்கி ஓவியங்கள் பொறிக்கப்படும். அந்த வகையில் சங்ககாலம் தொடங்கி பல்வேறு காலகட்டங்களில் இவ்வகை நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளதை இன்றளவும் நம் வரலாற்றை மீள் உருவாக்கம் செய்து பெரும் பங்காற்றி வருகிறது.

உதாரணமாக ஜனபத நாணயங்கள் என்றழைக்கப்படும் மகதம், அங்கம், காசி, கோசலம்,அவந்தி, வைத்ஸம், காம்போஜம், செடி, வஜ்ஜி,காந்தாரம் ,மல்ல,குரு, பாஞ்சாலம், மத்ஸம், சூரகனசேனா மற்றும் அஸ்ஸக் என்னும் 16 வித ஜனபத ( மக்கள் தலைவன் நினைவு) நாணயங்கள் இன்றளவும் வடநாட்டு வரலாற்றை மீள் பதிவு செய்து கொண்டு வருகிறது. மகதப் பேரரின் அச்சுக் குத்தப்பட்ட ( பஞ்ச்மார்க்) நாணயங்கள் அந்த அரசின் சிறப்புகளை தாங்கி நம் கையில் உலா வருகிறது. தமிழர் நாகரிகம் செழித்து வளர்ந்த சங்ககாலத்தில்.; மாக்கோதை காசு, பெருவழுதிக் காசு, சாதவாகனர் காசு, சாலங்காயினர் காசு, பல்லவர் காசு, கந்தசதகர்னி காசு, கடும்பிடுகு காசு, பெரும் பிடுகு காசு, பகாப்பிடுகு காசுகள் என தன் இனத்தலைவனின் நினைவாக அச்சூழலில் ஆட்சி செய்த மன்னர்கள் எவ்வாறு நாட்டை திறம்பட வழிநடத்தினார் என்பதற்காக அவர்களின் நினைவாக நாணயங்களை வெளியிட்டனர்.

மேலும் சாதவாகனர் காலத்தில் வெளியான பள்ளிப்படை நாணயங்கள், பல்லவர் காலத்தில் வெளியான பல்லவர்கள் ஆட்சியின் சிறப்புகள் பொறிக்கப்பட்ட நாணயங்கள், சோழர்கள் காலத்தில் வெளியிடப்பட்ட பள்ளிப்படை நாணயங்கள், பாண்டியர்கள், சேரர்கள், கங்க ஒய்சாளர்கள், மதுரையை கைப்பற்றிய சுல்தானியர்கள், விஜயநகரப் பேரரசின் காசுகள், அவர்களுக்குப் பிறகான நாயக்கர் காலத்திய காசுகள், மராத்தியர்கள் பள்ளிப்படை நாணயங்கள், மைசூர் காசுகள், ஆங்கிலேயர்கள், ரோமானியர்கள் முதற்கொண்டு தற்போதைய இந்திய ஒன்றியத்தில் ஜவஹர்லால் நேரு தொடங்கி தென்னாட்டின் சிற்பிகளாக விளங்கும் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா அவர்கள் வழியில் தற்போது முத்தமிழை முதல் மொழியாகக் கொண்டு. "தமிழ் வாழ்க" என்னும் வரலாற்றுப் பேழையுடன் வெளிவந்துள்ள 'கலைஞர் 100 பள்ளிப்படை நாணயம்' தமிழ் நாட்டு வரலாற்றை செம்மைப்படுத்திய சிற்பியின் வரலாற்று ஆவணமாக இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு அழியாமல் எடுத்துச் செல்லும். அடுத்தடுத்த தலைமுறைக்கு இந்த மாமன்னன் புரிந்த போரும், அவன் பெற்ற வெற்றியையும் அழியாமல் எடுத்துச் செல்லும். கையில் வாளேந்தவில்லை. அதற்குப் பதிலாக பேனா ஏந்தி போர் புரிந்த திராவிட வேந்தன் கலைஞர் கருணாநிதி. பராந்தக சோழனின் மூத்த மகன் இராஜாதித்தன் தக்கோலப் போரில் இரட்டை மண்டலத்து கன்னர தேவன் எய்திய அம்பால் யானை மேல் அமர்ந்து போரிடும்போதே வீரமரணம் அடைந்த காட்சியைப் போல.

தற்காலத்தில் மக்களை சீரழிக்கும் சாதி மத மூடநம்பிக்கை கொண்ட சமூக அவலங்களை எதிர்த்து ஜனநாயகப் போரில் வெற்றிகண்ட முத்தமிழ் கண்ட திராவிட மன்னன் கலைஞர் அவர்கள் அரசியல் போர்களத்திலேயே வீரமரணம் அடைந்தாலும். திராவிட சித்தாந்தம் தழைத்தோங்கும் வரலாற்று சாட்சிகளை மீண்டும் நமக்கு காட்சிப்படுத்திச் சென்றுள்ளார்.

அனைவருக்கும் அனைத்தும், அனைவரும் அனைத்திலும் சமம் என்கிற கோட்பாட்டை வெற்றிபெறச் செய்த அரசியல் பேரொளி தலைவர் கலைஞர்.

நாணயங்கள் என்பது நாணயத்தின் மறுபடிமம்.

அந்த நாணயத்திற்கே பெருமை சேர்த்து அடையாளம் கொடுக்கும் 'கலைஞர் 100 பள்ளிப்படை நாணயம்' திராவிட வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்ட எழுத்து.

அதனால் தான் கலைஞர் மூச்சாக இயங்கிய 'தமிழ் வாழ்க' என்னும் எழுத்தோவியம் அவரோடே இணைந்து கொண்டது.

இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும், தலைவர் கலைஞரின் பள்ளிப்படை வரலாற்று ஆவணமாக திகழ்ந்து. திராவிட தேசத்தை வழிநடத்தும்.

தமிழ் வாழ்க. தலைவர் கலைஞர் வாழ்க.

**மணியன் கலியமூர்த்தி**

மாவட்ட துணை அமைப்பாளர்.

கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை

திராவிட முன்னேற்றக் கழகம்.

அரியலூர் மாவட்டம்



கோவை தெற்கு மாவட்டம் சூலூர் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட கணியூரில் தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் கலந்து கொண்டு நடந்து முடிந்த கோவை நாடாளுமன்ற தேர்தலில் சூலூர் வடக்கு ஒன்றிய பகுதியில் அதிக வாக்குகள் பெற்றுத் தந்த நிர்வாகிகளுக்கு வாழ்த்து தெரிவித்தார்.பின்னர் நாடாளுமன்ற தேர்தலில் அதிக வாக்குகள் பெற்றுத் தந்த செம்மாண்டாம் பாளையம் ஊராட்சி நிர்வாகிகள் 3 பேருக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் வழங்கப்பட்ட தங்க மோதிரங்களை பரிசாக வழங்கினார். ஒன்றிய செயலாளர் ஏ.வி அன்பரசு தலைமையில் அவைத் தலைவர் தன்ராஜ், துணை செயலாளர்கள் ப.சீனிவாசன், சுந்தரம், பொருளாளர் சுகுமார், மாவட்ட பிரதிநிதிகள் கோபால்சாமி, கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில் ஊராட்சி மன்ற தலைவர்கள் கணியூர் வேலுச்சாமி, பதுவம் பள்ளி சப்தகிரி ஆர். சரவணன், பொதுக்குழு உறுப்பினர் ரகுதுரைராஜ், மீனவரணி ராமசாமி, அறங்காவலர் குழு உறுப்பினர் சிபி. கே.செந்தில்குமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெயலலிதா, ஒன்றிய கவுன்சிலர்கள் மகேஸ்வரி நடராஜ், சுப்பிரமணி, ஒன்றிய இளைஞரணி கே.எம். ஜெகதீஷ், நகர செயலாளர்கள் கலங்கள் சிவக்குமார், கணியூர் சிவக்குமார், ஜீவானந்தம் மற்றும் மாவட்ட, ஒன்றிய ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.